**செ. கு. எண்**: 111 **நாள்**: 20-03-2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 20.3.2012

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் கிராமம் அருகே, பெங்களூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 16.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வேலூர் மாவட்டம், ஏலகிரிமலை நிலாவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜி என்பவரின் மகன் சஞ்சீவ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை கிராமம், சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் 18.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கோனேரிகுப்பம், அரசு ஆரம்ப பள்ளி ஆசிரியை திருமதி சுதா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு சாலை விபத்துக்களிலும் அகால மரணமடைந்த சஞ்சீவ் மற்றும் சுதா ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு. சஞ்சீவ் மற்றும் திருமதி சுதா ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**